Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.234/2025

Dated 21-01-2026
Deposition of witness for : PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இக்னேஷியஸ் டேனியல் | வயது | : | 34 |
| தந்தை பெயர் | : | விசுவாசம் ரெக்ஸ் | தாலுக்கா | : | பூதலூர் |
| கிராமம் | : | மைக்கல்பட்டி | தொழில் | : | இரண்டாம் நிலை காவலர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused absent 355 BNSS Petition filed and allowed.**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது திருவையாறு காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.10.2024 அன்று காலை 7.00 மணிக்கு கண்டியூர்-விளாங்குடி மெயின்ரோட்டில் ரோந்து பணியில் இருந்தபோது கஸ்துரிபாய் நகர் அருகில் கார்த்தி என்பவர் கையில் அருவாளை வைத்துக்கொண்டு பொதுமக்களக்குஅச்சுறுத்தல்

ஏற்படுத்துவதாக உதவி ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்து அவர் எங்களிடம் சொல்லி நானும் மற்றொது இரண்டாம்நிலை காவலர் 2839 மோகன் என்பவரும் கஸ்துரி பாய் நகருக்கு சென்றோம். அங்கு கார்த்தி என்பவர் கையில் வாளை வைத்துக்கொண்டு போவோர் வருவேரை மிரட்டி கெட்டவார்த்தைகள் சொல்லி திட்டிகொண்டிருந்தார். போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தினார். எதிரியை என்னால் அடையாளம் காட்டமுடியும். அவர் நீதிமன்றத்தில் இல்லை.

2) நாங்கள் அவர் அருகில்போக முயற்சித்தபோது அவர் எங்களை பார்த்து அருகில் வந்தால் உங்களையும் வெட்டுவேன் என்று அருவாளை காட்டி மிரட்னார். நாங்கள் அவரை மடக்கி பிடித்து கையில் இருந்த வாளை பிடிங்கினோம். அப்போதுஅந்த இடத்திற்கு பெண் உதவி ஆய்வாளர் வந்துவிட்டார். நாங்கள் எல்லோரும் அவரை பிடித்து காலை 9.15 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்தோம். அந்த வாள்தான் அ.சா.பொ.1 ஆகும். கைப்பற்றுதல் மகஜரில்உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. இரண்டாவது கையெழுத்து காவலர் மோகன் என்பவருடையது. அதற்கான மகஜர் அ.சா.ஆ.1 ஆகும். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்தான முதல் கையெழுத்து என்னுடையதுதான். இன்னொரு கையொப்பம் மோகன் என்பவருடையது.

3) உதவி ஆய்வாளர் அவர் வழக்கு பதிவு செய்தார். என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) பணிபதிவேடு தனியாக எனக்கு இருக்கிறது என்றால் சரிதான். அந்த பணிபதிவேட்டில்

என்ன பணி செய்யவேண்டும் என்பது குறித்து பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

2) அந்த பணிபதிவேடு முடிந்து விட்டால் அதை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிடுவோம் என்றால் சரிதான்.

3) முன் விசாரணையில் சொல்லி உள்ள விபரங்கள் குறித்து அந்த பணி பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4) உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது அந்த பணிபதிவேட்டை அவரிடம் ஒப்படைத்தேன்.

5) சொல்லப்படும் சம்பவ இடமானது பெட்டிக்கடை, பஸ்டாப், போக்குவரத்து உள்ள இடம் என்றால் சரிதான்.

6) நாங்கள் சம்பவ இடத்திற்கு போகும் வரை தனி நபர்கள் யாராவது இந்த சம்பவம் பற்றி சொன்னார்களா என்றால் உதவி ஆய்வாளரிடம் சொன்னதுதான்.

7) அந்த நேரத்தில் நாங்கள் காவல்நிலையத்தில் இல்லை. கண்டியூர் - திருவையாறு ரோட்டில் நடுகடை தாண்டி ரோந்தில் இருந்தோம். சம்பவ இடத்திற்கும் நடுகடைக்கும் இடையே தோராயமாக 2 கி.மீ. தூரம் இருக்கும்.

8) உதவி ஆய்வாளர் எங்களுக்கு தகவல் கொடுக்கும்போது காவல்நிலையத்தில் இருந்தார். காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் தோராயமாக 1-1/2 கி.மீ. தூரம் இருக்கும்.

9) திருவையாறில் இருந்து சம்பவ இடத்திற்கு வருவதற்கு வேறு வழி என்றும்

நடுக்கடையில் இருந்து சம்பவ இடத்திற்கும் வேறு வழி என்றால் சரிதான்.

10) அ.சா.ஆ.1 உதவி ஆய்வாளர்அவர்களால் எழுதப்பட்டது. அதில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

11) அ.சா.ஆ.1 எழுதும் போது உதவி ஆய்வாளர் தனி நபர் சாட்சிகள் யாரையாவது அழைத்தாரா என்றால் யாரும் இல்லை அதனால் அழைக்கவில்லை.

12) நான் சொல்லக்கூடிய சம்பவ இடத்தில் எந்த கடையும் இல்லை. வேறு யாரும் இல்லை. அவர் மட்டும்தான் இருந்தார்.

13) நான் முன் விசாரணையில் சொன்னதுபோல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும் சொன்னநேரத்தில் சொன்ன இடத்தில் எதிரி அங்கு இல்லை என்றும் வீட்டில் இருந்த எதிரியை காவல்நிலையம் அழைத்து வந்து அவர் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவரிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P. வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்